அறவழி

NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாத இதழ் ※ 1987 சித்திரை பக்கம் 12 ※ விலை 2-00 வழி 12

நாளைய தலைவர்களை உருவாக்குவோம்

"இன்றைய சிறுவர்கள்தான் நாளைய தலைவர்கள்" என எம் மத்தியில் இருப்பவர்கள் மிக அழகாக மேடைகளில் பேசுவதிலும், பத்திரிகைகளில் எழுதுவதிலும்வல்லவர்களாக இருக்கின்றார்கள்.

ஆனல் நாளைய எமது சமுதாயத்தின் பொறுப்புணர்வுமிக்க தலைவர்களை எவ்வாறு நாம் உருவாக்குகின்றோம்? உருவாக்கப் போகின்றோம்? என்பதில் எம்மவர்கள் மத்தியில் செயல்பாடுகளோ அன்றித் திட்டங்களோ இருப்பதாகத் தெரியவில்லை.

நாளைய சமுதாயத்தை திட்டமிட்டு வழி நடத்திச் செல்லக்கூடிய நாளைய தலைவர்களாக மிளிரப்போகின்ற இன்றைய சிறுவர்கள்— எங்கே இருந்து உருவாகப்போகின்றார்கள். நாளைய தலைவர்களை உருவாக்குகின்ற புனித பணியில் இன்று எம் மத்தியில் இருக்கக்கூடிய கல்விக்கூடங்கள். பொது ஸ்தாபனங்கள் எவ்வாறான கொள்கை வகுப்புக்களை, திட்டங்களை உருவாக்கியுள்ளன என்பதை சமுதாயம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

மனித வாழ்வில் எதிர்நோக்குகின்ற சிறிய—பெரிய பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது? சமுதாயத்தை சதா துன்புறுத்திக்கொண்டிருக்கின்ற முரண்பாடுகள்— கருத்துவேற்றுமைகள்— பிரச்சனைகள் — வன்முறைகள்—அழிவுகளை எவ்விதம் நாளைய தலைவர்கள் அணுகித் தீர்வுகாணக்கூடும் என்பன போன்ற விடயங்களில் இன்றைய சிறுவர்களுக்கு பயிற்சிகள்மூலம் பாடங்கள் புகட்டப்படவேண்டும்.

இன்றிருக்கும் சிறுவர்களை உரிய வழிகளில் பயிற்றுவித்து, எதிர்காலத்தில் சமுதாய நேயமுள்ளவர்களாகவும், பொறுப்புணர்வு மிக்கவர்களாகவும், சமுதாயத்தின் மீது தொலைநோக்குப் பார்வைகொண்டவர்களாகவும் ஆக்கிக்கொள்ளநாம் எல்லோரும் திட்டமிட்டுச் செயல்படவேண்டியது முக்கியமான தாகும்,

எனவே இன்றைய சிறுவர்களை வெறும் புத்தகப்பூச்சிகளாகமட்டும் ஆக்காமல். சமுதாய நற்பணிகளில் ஈடுபடச் செய்து, அவர்கள் மத்தியில் கடமை—கண்ணியம் —கட்டுப்பாடு—அன்பு — நல்வழிச்சிந்தனைகளை ஏற்

(2ம் பக்கம் பார்க்க)

வாசகர்களே!

அறவழியின் பன்னிரண்டாவது இதழாக இப்பத்திரிகை வெளிவருகின்றது. அறவழி பத்திரிகை ஆரம்பித்த மாதம் முதல் தொடர்ச்சியாகத் தாங்கள் காட்டிவருகின்ற அன்பு—ஆதரவு—ஒத்துழைப்பையிட்டு நாம் மிகவும் பெருமைப்படுகின்றோம்.

அறவழி பத்திரிகையின் தனித்துவமிக்க பணியினைப் பாராட்டி உங்களில் பலர் எமக்கு மடல்கள்மூலம் ஆர்வமூட்டிவருவது எமக்கு மென்மேலும் ஊக்கம் தருவதாகவுள்ளது.

இப்பத்திரிகையின் எதிர்கால வளர்ச்சிக்கும்— உயர்ச்சிக்கும் தங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் தொடர்ந்து எமக்குக் கிடைக்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். —ஆசிரியர்

மனித உயிர்க்கொல்லி
மதுவினை ஒழிப்போம்

மனிதன் உயிர் வாழ
பதனீர்—
பனை வெல்லம்—
பனஞ் சீனி—
உற்பத்தியில் ஈடுபடுவோம்

அறநோக்கில்

அகதிகளுக்கு உதவுவீர்

பயங்கரவாத அழிப்பு என்ற போர்வையில் தமிழ் மக்கள்மீது ஸ்ரீலங்கா ராணுவத்தால் மிகவும் மூர்க்கத்தனமான முறையில் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் காரணமாக. லட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் தினம்—தினம் அகதிகளாக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதிகள்!

தமிழ் மக்களின் சொத்துக்கள் அழித்து ஒழிக்கப்படுகின்றன!

பிரதேசத்தின் சொத்துக்களான ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், கல்விக்கூடங்கள் கூட ராணுவத்தின் தாக்குதல்களுக்குத் தப்பவில்லை,

ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் நோயாளிகள்கூட பாதிக்கப்பட்டுள்ளனர். மரணித்துள்ளனர்.

தமிழ் மண்ணில் அகதிகளாகியுள்ள மக்களின் துன்பங்கள், இழப்புக்கள் இலகுவில் எழுத்தில் வடிக்க முடியாதவைகளே!

அகதி மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி ஒதுங்க இடமின்றி அவலமான வாழ்வை வாழ்கின்றார்கள்.

அகதிகளாகியிருக்கும் சிறுவர்களின் கல்வி வளர்ச்சியும் உடல்—வளர்ச்சியும்கூட பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழன் தன் சொந்த மண்ணிலும் அகதி—வெளிநாடுகளிலும் அகதி.

வெளிநாடுகளில் அகதி அந்தஸ்துக்கோரி இருப்பவர்கள் மிகவும் பாதுகாப்பாக வாழ்கின்றார்கள், அவர்களின் நிலையோ வேறு!

ஆனால் இங்குள்ள அகதிமக்களின் நிலையோ வேறு

சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்ட அப்பாவி மக்களின் வாழ்க்கைக்கு உதவவேண்டிய பாரிய பொறுப்பும்—கடமையும் இங்குள்ள ஏனைய மக்களுக்கு நிரம்பவும் உண்டு என்பதை நாம் நினைவூட்ட விரும்புகின்றோம்,

அகதிகள் என்றால் அசிங்கமானவர்கள் என்ற நினைப்பும் எம்மவர்கள் சிலரிடம் இருப்பது குறித்து மனித நேயமுள்ளவர்கள் வேதனை கொள்ளாமல் இருக்கமுடியாது.

வாழ்வின் கருத்து

வாக்ழ்கையை நாம் ஒருமுறைதான் வாழ்கிறோம். அதில் நாம் உண்மை பேசாது: தியாகம் செய்யாது: அநியாயங்களை அக்கிரமங்களை எதிர்த்துப் போராடாது போய் விட்டோமானால் நாம் எதற்காக வாழ்ந்தவர்களாவோம்? நாம் வந்தபோது இருந்ததைவிட வாழ்க்கையை மேம்பட்டதாக ஆக்கி அதை நமது சந்ததிகளுக்கு விட்டுச் செல்லவில்லையென்றால் எதற்கக வாழ்ந்தவர்களாவோம்!

நாளைய தலைவர்களை.........

(1ம் பக்கத்தொடர்ச்சி)

படுத்தி எம் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றக்கூடிய நாளைய தலைவர்களை உருவாக்குப் பணிகளை நாம் தீவிரமாகச் செயல்படுத்தவேண்டும் என அறவழி விரும்புகின்றது.

பழமை பேணுகின்ற வழிமுறைகளைமாற்றி —புதிய சிந்தனைகள் செயல்பாடுகளை சமுதாய நன்மை கருதி ஏற்படுத்துவோம்.

தமிழன்—தனது சொந்த மண்ணில் ஏன் அகதியாக்கப்பட்டுள்ளான்? அவன் எவ்வாறு உண்கின்றான்? உடுக்கின்றான் அவனது அடிப்படைத் தேவைகள் எவ்வாறு ஈடேற்றப்படுகின்றன? என்பவற்றை ஆழமாக, மனிதாபிமான நோக்குடன் எம்மக்கள் சிந்தித்துச் செயல்படவேண்டிய தருணம் இதுவாகும்.

எனவே, இவ்வாறான மக்கள் மத்தியில் பாகுபாடுகள்—உயர்வு தாழ்வுகள்—ஒப்பீடுகள் நோக்காது—அனைவரும் அகதிகள்தான் என்ற நிலையில். எவ்வகையில் உதவமுடியுமோ அவ்விதம் உதவுதல் அவசியமானதென்பதை மனதில் கொண்டு உதவுங்கள்.

எம் மக்கள் அனுபவிக்கின்ற துன்பங்கள் துயரங்களில் நாமும் எம்மாலான வகையில் எம் பங்களிப்புக்களைச் செலுத்தவேண்டும்.

ஆதலால், அகதி மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை மனதில் கொண்டு அவர்களின் அமைதியான வாழ்வுக்கு உதவ மனித நேயமுள்ளவர்கள் முன்வருதல் வரவேற்கக்கூடியதாகும்.

தமிழ் மண்ணில் காந்திஜீ

யாழ்ப்பாணத்தில் உள்ள பல கல்வி நிலையங்களுக்கு விஜயம் செய்தபின் இன்று (29—11—1927) காலை இங்கு வந்தமை அதைப் பூரணப்படுத்துவது போலிருப்பது எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. சிறந்த முறையில் எளிமையாக இந்த வைபவம் முழுவதும் இன்று காலை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது எனது கவனத்தைப் பெறத் தவறவில்லை என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்,

பெரும்பாலான பணமுடிப்புகள் போலல்லாது தயாள சிந்தையுடன் எனக்கு அளிக்கப்பட்ட 1111 ரூபா கொண்ட பணமுடிப்பு கதர்பையிலே வழங்கப்பட்டதை நான் பாராட்டுகிறேன். எல்லாவற்றிற்கும் மகுடம் சூட்டுவதுபோல் இந்த ,வைபவத்திலே தான் கலந்துகொள்ளமுடியாமைக்கு சேர் பொன் இராமநாதனுல் அனுப்பப்பட்ட அன்பான செய்தியை லேடி இராமநாதன் என்னிடம் அளித்துள்ளனர். சேர். பொன் இராமநாதனுடைய வள்ளல் தன்மைக்கும் முன் ஆலோசனை உடைமைக்கும் நினைவுச் சின்னமாக உள்ள இக்கல்லூரிக்கு நான் வர முடியாதிருப்பின் என்றும் நான் துக்கப்பட நேரிட்டிருக்கும். உங்கள் வரவேற்புரையின் பிரதி ஒன்றினை முன்கூட்டியே இக்கல்லூரியின் அறிக்கை ஒன்றுடனும் கல்லூரிமலரின் இருபிரதிகளுடனும் லேடி இராமநாதன் தந்துள்ளார்.

கதர் இயக்கம்

இன்றைய தினத்தை வருடா வருடம் நீங்கள் கொண்டாட இருப்பதாகவும் அதன்மூலம் கதர் இயக்கத்திற்குப் பணம் சேகரிப்பது எனவும் உங்கள் வரவேற்பிலே குறிப்பிட்டது எனது இதயத்தை மிகவும் கவர்ந்துள்ளது. உங்களின் இந்த உறுதிமொழி நம்பமுடியாததொன்று அல்ல என்பது எனக்கு தெரியும். ஆனல் கட்டாயமாக இந்த வாக்குறுதியைக் கடைப்பிடிப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். பட்டினியால் வாடிவதங்கும் கோடிக்கணக்கானவர்களின் சார்பில்தான் நான் மேற்கொண்டுள்ள சுற்றுப்பிரயாணத்தால் அவர்களுடைய சகோதரர்களின் தீர்மானத்தை அவர்கள் அறியும்போது உண்மையில் அவர்களது இதயம் குளிருமாயின் ஊமைகளாகிய அந்தக் கோடிக்கணக்கானவர்களுக்காக உங்களால் வழங்கப்பட்ட பணமுடிப்பும் இலங்கையில் வழங்கப்பட்ட பண முடிப்புகளும்பற்றி அவர்களுக்கு விளங்கமுடியாததாக இருக்கும் என்பதை உங்களுக்கு கூறினல் நீங்கள் மனவருத்தமடைவீர்கள். அவ்வாருன நிலையில் அவர்களது இன்னல் நிறைந்த வாழ்க்கை எவ்வாறிருக்கும் என்பதனை சரியானமுறையில் தெளிவாக என்னல் விபரிக்க முடியாது.

இவர்களுக்கும் இவர்களைப் போன்றவர்களுக்கும் நீங்கள் என்ன செய்யவேண்டும் என்ற நிலைக்கு உடனே என்னை கொண்டுவருகின்றது. வாழ்க்கையில் இன்றும் எளிமைவேண்டும் என்றும் வாழ்க்கையில் இன்னும் சிறிது கஷ்டம் தேவை எனக்குறிப்பிடுவதும் சுலபம். ஆனல் அது அந்தப் பிரச்சனையுடன் சிறிது விளையாடுவது போன்றதே. நினைவுக்கு மேல் நினைவுகளே என்னை கைராட்டினத்திற்குக் கொண்டு வந்தன. பட்டினியால் வாடும் கோடிக்கணக்கான மக்களுக்கும் உங்களுக்கும் ஒரு வாழ்க்கை இணைப்பை ஏற்படுத்தினல் உங்களுக்கும் அவர்களுக்கும் உலகினுக்கும் ஒரு நம்பிக்கையுண்டு என உங்களுக்கு கூறுவதுபோல் எனக்கு தானே கூறினேன். சமய போதனை உங்களுக்குண்டு. அதுவும் இக்கல்லூரியில் மிகவும் திறமையாக இருக்கின்றது. அழகான ஆலயம் ஒன்றும் உங்களுக்குள்ளது. உங்கள் நேரசூசியின்படி பிரார்த்தனையுடன் நாளுக்குரிய வேலைகளை ஆரம்பிக்கின்றீர்கள், அவை யாவும் உன்னதமானவை; மேம்படுத்துவனவுமாகும். ஆயின் அந்தப் பிரார்த்தனையை வாழ்க்கையில் ஒவ்வொருநாளும் உண்மையான முறையிலே கடைப்பிடிக்காவிடில் அழகான சடங்குகளே ஒழிய வேறொன்றுமில்லை. பிரார்த்தனையின் 'நோக்கத்துடன் வாழவேண்டுமாயின் கைராட்டினத்தை பயன்படுத்துங்கள். அரை மணி நேரம் அதனருகே அமர்ந்து நான் உங்களுக்கு விபரமாகக் கூறிய கோடிக்கணக்கான மக்களை நினைவு கூருங்கள். கடவுளை நினைத்து அவர்களுக்காக நான நூல் நூற்கின்றேன் எனக் கூறுங்கள். உங்கள் மன விருப்பத்துடனும் கருத்துடனும் நீங்கள் செயலாற்றினல் நீங்கள்தான் தாழ்மையுடனும், பரிசுத்தத்துடனும் கருணையின் உண்மை நோக்கிற்காக செயற்படுவதாக உடனே அறிவீர்கள். அலங்காரத்திற்காக ஆடை அணியாது உடம்பைமூடும் பொருட்டே ஆடையணியும் நோக்கிருப்பின் கதர் அணிவதற்கு வெறுப்பு உண்மையில் இருக்காது. அதனல் உங்களுக்கும் கோடிக்கணக்கானவர்களுக்கும் அந்த உறவை ஏற்படுத்துவீர்கள். இக்கல்லூரி மாணவிகளுக்கு நான கூற விரும்புவது இது மாத்திரமல்ல,

(அடுத்த இதழில் தொடரும்)

சேவை செய்ய முன்வருபவர்களுக்கு எல்லையற்ற பொறுமையும் சகிப்புத தன்மையும் வேண்டும். —காந்தி

அரசும் பொருளாதாரமும்

காந்தி அடிகளின் கருத்துப்படி "இறுதி நிலையில் அரசு இருக்காது". மக்களே மக்களே நிர்வகித்துக் கொள்ளும் நிலை உருவாகும். ஆனால் அரசு அதுவரை வரையறுக்கப்பெற்ற அதிகாரங்களோடு செயல்பட வேண்டும். பலாத்காரத்தை பயன்படுத்தாமல் அரசால் இயங்கமுடிவதில்லை, ஆதலால்தான் அகிம்சை வழிச் சமுதாயத்தில் அரசுக்கு இடமில்லாமல் போகின்றது.

அரசு மிக்க குறைவான அளவிலேயே தனது கட்டுப்பாட்டு அதிகாரத்தைப் பெற்றிருக்கலாம். அரசு ஓரளவு ஒதுங்கி நின்று பொருளாதார நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டும்.

அரசு மிகுதியாக வரிகளை வாங்கி எல்லாப் பொதுப்பணிகளையும் அதுவே நிறைவேற்ற எண்ணக் கூடாது. இதனால் அரசின் சுமை கூடும். மக்கள் முயற்சி அற்றவர்களாகப் போய்விடலாம்.

அரசு வாங்குகின்ற வரிகளைப் பணமாக மட்டுமில்லாமல் பொருட்களாகவும் (விலை பொருட்களாக) வாங்குகின்ற நிலை வரவேண்டும். அரசு ஏழை எளியவர்களின் பாதுகாவலனாக இருக்கவேண்டும். மக்கள் நலனுக்குப் புறம்பான எந்த நடவடிக்கையில் ஈடுபடவும் கூடாது.

காந்தியடிகள் அரசு திட்டமிடுகின்ற மையத் திட்ட முறையை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்பொழுதுள்ள அரசு திட்டமிடுகின்ற முறையில் அரசு எல்லாம் வல்லதாக மாறிவிடுகின்றது. மக்கள் அரசின் ஆணைப்படி இயங்குபவர்களாக மாறிவிடுகின்றனர்.

காந்தியத்திட்டம் கீழிருந்து மேல்நோக்கிச் செல்வதாக இருக்கும். ஒவ்வொரு கிராமத்திற்கும் (அல்லது சமுதாயத்திற்கும்) தன்னிறைவு அடிப்படையில் ஒரு திட்டம் இருக்கும். அந்தத் திட்டம் மக்களால் திட்டப்பெற்று வெளியார் தலையீடோ உதவியோ இன்றி அவர்களாலேயே நிறைவேற்றப்பெறும்.

காந்திய முறை அரசு பஞ்சாயத்துக்களை அடிப்படையாகக்கொண்ட பரவல்முறை அரசாக இருக்கும். பொருளாதாரத்திலும் அத்தகைய பரவல் முறையே இருக்குமாதலால் அரசின் கை ஓங்க வழியிருக்காது,

எதற்கெடுத்தாலும் மக்கள் அரசையே நம்பி வாழ்வதைக் காந்தியடிகள் என்றும் விரும்பவில்லை. மக்கள் தங்கள் காலிலேயே நிற்கவேண்டும் என்பதை எப்பொழுதும் வலியுறுத்தி வந்திருக்கின்றார்.

நண்பர்களுடன் பழகுவது ஒரு கலை

உங்களைத் தேடிக்கொண்டு வந்த நண்பர் கூறும் விஷயத்தைப் பொறுமையுடன் கேளுங்கள்.

அவர் சொல்லும் விஷயம் உபயோகமில்லாததாக இருந்தால்கூட அதை நீங்கள் பாவனைமூலம்கூட வெளிப்படுத்திக்கொள்ள கூடாது.

புன்முறுவலுடன் முழுவதும் கேளுங்கள். உங்களுக்கு நண்பன் சொல்லும் விஷயம் மிகச் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் பிரச்சனை உள்ளவர்களுக்கு அது மலையளவே தெரியும். பிரச்சனையைத் தீர்க்க உங்களால் முடிந்த பதில்களைக் கூறுங்கள். உங்களுக்கே புரியாவிட்டால் நாசுக்காக வேறு யாரிடமாவது கேட்கச் சொல்லுங்கள்.

எந்த நண்பர்களிடமும் முகத்தை கடுகடுவென்று வைத்துக்கொண்டு பேசாமல் உங்களுடைய பிரச்சனைகளை, கோபம், இவைகளை உங்களை நண்பர்களிடம் காண்பிக்காதீர்கள். சிரித்துக்கொண்டே இருங்கள்.

நெருங்கிய நண்பர்கள் உங்களிடம் ஒரு வேலையைக் கொடுத்துச் செய்யச் சொல்லிக் கேட்டு கொண்டிருந்தால் அதை உங்களால் முடிந்தால் ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்டிச் செய்து கொடுங்கள். நாளைக்கு உங்களுக்கு ஒரு வேலை அவசரமாகச் செய்யப்படவேண்டுமென்றால் அந்த நண்பர்கள் செய்துகொடுப்பார்கள்.

நண்பர் ஒருவர் உங்களைப்பார்க்க வந்தால், அவர்கள் ஏன் வந்துவிட்டார்கள் என்பது போன்ற உணர்ச்சி முகத்தில் பிரதிபலிக்க அவரிடம் பேசுவதையோ நடந்து கொள்வதையோ தவிருங்கள்.

உங்கள் நண்பர் உங்களிடம் ஏதாவது ஒரு விஷயம்பற்றி அபிப்பிராயம் கேட்டால் அவர் சொல்வதை பொறுமையுடன் கேட்டு அபிப்பிராயம் கூறுங்கள்.

வாக்குவாதம் செய்யக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது மிகவும் முக்கியமாகக கவனிக்கவேண்டியது என்னவென்றால், பிறர் கூறுவதை பொறுமையுடன் கடைசிவரை கேட்பது. படபடப்புடன் வார்த்தைகளைக் கொண்டுவருவது விரோதத்தில் கொண்டுபோய் சேர்க்கும்.

பிறர் பேசும்போது அவரை உற்சாகப் படுத்துங்கள். தற்பெருமையோடு பேசவேண்டாம். பிறர் உங்களிடம் தற்பெருமையுடன் பேசும்பொழுது உங்களுக்கு என்ன எரிச்சலுண்டாகுமோ அதே எரிச்சல்தான் உங்கள் நண்பர்களுக்கும் உண்டாகும் என்பதை மறக்க வேண்டாம்.

ஒருவரைப்பற்றி அவர் இல்லாதபோது இன்னொருவரிடம் அபிப்பிராயம் கூறவேண்டாம்.

எதையும் இரவல் வாங்கவேண்டாம். கடன் வாங்கவேண்டாம். முடிந்த உதவி செய்யத் தவறவேண்டாம்.

பிரான்சில்

வாழத்துடிக்கும் 72 அனாதைகள்

பங்களாதேஷில் இருக்கும் சிட்டக்கொங் மலையடிவாரப்பகுதியில், கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, மிக ரகசியமான முறையில் இடம் பெற்று வரும் போரில் இதுவரை 185,000 மக்கள் இறந்துள்ளனர். இப்போரில் 'சக்மா' இனத்தைச் சேர்ந்தவர்களே கொல்லப்பட்டனர் என்ற விபரம் ஏற்கனவே அறவழி பத்திரிகையில் வெளியிடப்பட்டமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

கடந்த ஆறுமாத காலத்தில் இடம்பெற்ற மிக மோசமான போரின் காரணமாக 40,000க்கு மேலான பெண்களும், குழந்தைகளும் தம் இருப்பிடங்களை விட்டு பங்களாதேஷின் எல்லைப்புறத்தில் இருக்கும் இந்திய அகதிகள் முகாமில் தஞ்சமடைந்திருக்கின்றனர்.

இந்த அகதிகள் முகாமில் தஞ்சமடைந்திருக்கும் மக்கள் பல்வேறுவிதமான துன்பங்களையும், கஷ்டங்களையும் அன்றாடம் அனுபவித்துவருகின்றனர்.

சிட்டக்கொங் மலையடிவாரத்தின் வடபுலமாகிய 'டிஜினாலா' பகுதியில் அமைந்திருந்த 'பர்வாத்யா' எனும் அனாதை இல்லமும் இவ்விரகசியப்போரில் தாக்கப்பட்டதை அடுத்து, இவ்அனாதை இல்லத்தில் இருந்த சுமார் 72 குழந்தைகளும் தற்போது இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் இருக்கும் அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

டிஜினாலா பகுதியில் இவ்அனாதை இல்லத்தை நிர்வகித்து நடாத்திய ''பார்ரேஞ்'' எனும் பிரான்சிப் ஸ்தாபனம், இந்திய அகதிகள் முகாமில் தஞ்சமடைந்திருக்கும் 72 குழந்தைகளையும் பிரான்சுக்கு அழைத்து அவர்களது வளமான எதிர்கால வாழ்க்கைக்கு உதவ முன்வந்துள்ளது.

அதேவேளை பிரான்சில் இருக்கும் சுமார் 69 குடும்பங்கள் இந்த 72 குழந்தைகளைப் பராமரித்துக் கொள்ளும் பொறுப்பை எடுத்துக்கொள்ள முன்வந்துள்ளன,

---

சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால், மக்கள் அறவழியில் நிற்கவேண்டும். நின்றால் சுகமும் நிகரற்ற புகழும் பெறலாம். —ராஜாஜி,

ஆனாலும், இவ்விடயத்தில் இந்தியா—பங்களாதேஷ் அரசுகளுக்கிடையே இழுபறியும், சிவப்புநாடாச் செயல்பாடுகளும் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன.

இந்த 72 குழந்தைகளையும், பிரான்சுக்கு அனுப்பி வைப்பதை பங்களாதேஷ் அரசு ஆட்சேபிக்காமல் விடும் பட்சத்தில், இந்தியாவில் இருக்கின்ற அகதிகள் முகாமில் இருந்து இவர்களை பிரான்சுக்கு இந்தியா அனுப்பி வைக்கும் என இந்திய அரசு வட்டாரங்கள் கூறிவருகின்றன.

அதே வேளை, பங்களாதேஷ் அரசோ இந்த 72 குழந்தைகள் விடயத்தில் எவ்வித தீர்க்கமான பதிலையும் இதுவரை அளியாமல், காலத்தைக் கடத்தி வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பிரான்சிய ஜனாதிபதியின் மனைவி திருமதி மிற்றறென்ட். இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் தொடர்புகொண்டு இந்த 72 குழந்தைகளின் பாதுகாப்பான அமைதியான வாழ்வுபற்றிப் பேசியுள்ளார்.

கூடவே, அன்னை திரேசா அம்மையாரும் பங்களாதேஷ் ஜனாதிபதி திரு. ஏர்ஜாட்டுடனும், இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியுடனும் தொடர்புகொண்டு, சம்பந்தப்பட்ட குழந்தைகளின் எதிர்காலம்பற்றிப் பேசியுள்ளதுடன், அவர்களை மனிதாபிமான அடிப்படையில் பிரான்சு செல்ல அனுமதிக்கும்படி கோரியுள்ளார்.

இதன் பிரகாரம், இக்குழந்தைகளை பிரான்சுக்கு அனுப்பி வைக்க இந்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளபோதிலும், பிரான்சிடம் பங்களாதேஷ் அரசிடம் உரிய அனுமதியைப் பெறுமாறு இந்தியா, பிரான்சினை வேண்டியுள்ளது.

ஆனால், இக்குழந்தைகளை பிரான்சு தேசத்துக்கு அனுப்ப, அனுமதித்தால், பங்களாதேசின் சிட்டக்கொங் பகுதியில் இடம்பெற்றுவரும் ''ரகசியப் போர்'' பற்றிய தகவல்களையும், மனித உரிமை மீறல்களையும், அவர்கள், பிரான்சிய மக்களுக்குத் தெரிவித்துவிடுவார்களே என்ற அச்சம்—பயம், காரணமாக பங்களாதேஷ் அரசு உரிய பதிலை அளிப்பதில் தாமதித்துவருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக, பிரான்சிய ஜனாதிபதி, பங்களாதேஷ் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றினை எழுதி, இந்த 72 குழந்தைகளையும், உடன், பிரான்சுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரியுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

மகாத்மா

கண்டிப்பான தலைவர்

காந்தி தமிழ்நாட்டில் 1934 ல் சுற்றுப்பயணம் செய்தபோது மதுரையில் ஒருநாள் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டபிறகு தேவகோட்டைக்கு விஜயம் செய்வதாகப் பிரயாணத்திட்டம் வகுத்திருந்தார்கள். காந்தியும் அவருடைய குழுவினரும் மதுரையில் திரு சுப்பராமன் வீட்டில் தங்குவதாக ஏற்பாடு. வழியில் மோட்டார்வண்டி பழுதடைந்ததால் காந்தி மதுரைக்கு வந்து சேரும் போது இரவு நேரமாகிவிட்டது. அசதியாக இருந்தாலுங்கூட தம் வழக்கப்படி அடுத்தநாள் நிகழ்ச்சிகளை அவர் கேட்டுப்படித்தார். அந்தச் சமயத்தில் தேவ கோட்டை அரிஜனசேவா சங்கத்தின் தலைவர் திரு ரங்கசாமி ஐயங்கர் வந்திருப்பதாகக் காந்தியிடம் ஒருவர் கூறினார்.

மதுரையில் இருந்து தேவகோட்டைக்குச் செல்வதாக ஏற்பாடு, ஆகையால் தேவகோட்டை நிகழ்ச்சிகளைப் பற்றி கலந்து பேசுவதற்காக ரங்கண்ணா என்று அன்பர்களால் அழைக்கப்பட்ட திரு ரங்கசாமி ஐயங்கர் வந்திருந்தார். அவரை அழைத்து வருமாறு காந்தி கூறினார். ரங்கண்ணா அரிஜன நிதிக்குத் தம் காணிக்கையாக ஆயிரம்ரூபாயைத் தந்ததுடன் தம்முடைய வட்டாரத்திலிருந்து கணிசமான தொகையை வசூலித்துத் தரவும் திட்டமிட்டிருந்தார். அவரை குசலம் விசாரித்தபிறகு தமக்கு பிரயாணக்களைப்பு அதிகமாக இருப்பதாக காந்தி கூறினார்.

இங்கு மேலும் ஒருநாள் தங்கி இளைப்பாறிக் கொண்டு பிரயாணத்தை தொடங்கலாமே! தேவ கோட்டை பயணத்தை ஒத்திவைத்துக் கொள்ளலாம் என்றார் ரங்கண்ணா. ''எப்படிச் சாத்தியப்படும் என்று வியப்புடன் கேட்டார் காந்தி. எனக்கு ஓய்வு தேவை தான். அதற்காக திட்டத்தை மாற்றினால் குழப்பமும் பலருக்கு அசௌகரியமும் ஏற்படலாம் அதை நான் விரும்பவில்லை'' என்றார் காந்தி.

''ஒருநாள் தாமதம் ஏற்பட்டால் பரவாயில்லை என்றார் அவர். அப்படியா? எனக்கு சிறிது ஓய்வுதர முடியுமா? நல்லது என்றார் காந்தி. உங்களுக்கு ஓய்வு அவசியம் என்று கூறிவிட்டு ரங்கண்ணா விடை பெற்றுக் கொண்டார்.

மறுநாள் காலையில் காந்தி உணவருந்திக்கொண்டு இருந்த போது தேவ கோட்டை பிரமுகர்களில் சிலர் அவரைக் காணவந்தார்கள். தேவ கோட்டைப் பயணத்தை ஒத்திவைத்தால் பல அசௌகரியங்கள் ஏற்படலாம் என்றும் திட்டமிட்டபடி பயணம் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

காந்தி சிரித்துக்கொண்டே ''உங்களுடைய தலைவர்தாம் நான் களைப்பாக இருப்பதைக் கண்டு ஒருநாள் விடுமுறை அளித்தாரே! கண்டிப்பான தலைவர் ஒருவரை அனுப்பியிருந்தால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டிருக்காதே! என்று கூறினார். அனைவரும் சிரித்தார்கள்.

காந்தி திட்டமிட்டபடி தேவகோட்டைக்குச் சென்றார். அங்கே பணமுடிப்பை ஏற்றுக்கொண்ட போது உங்களுடைய தலைவர் ரங்கண்ணா எனக்கு ஒரு நாள் விடுமுறை அளித்தார். ஆனால் அதை ரத்துச் செய்துவிட்டு நான் இங்கே வந்திருக்கிறேன், அதற்கு ஈடாக ஒரு தொகையையும் இதில் சேர்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன் என்றார் காந்தி. கூட்டத்தில் இருந்தவர்கள் இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஒரு நாள் மாலை பிரார்த்தனைக்குப் பிறகு தமிழன்பர் ஒருவர் காந்தியை அணுகித் தமிழில் கையெழுத்துப் போடும்படி கோரினார். ''எழுதிப்பார்க்கிறேன்'' தவறாய் இருந்தால் திருத்துங்கள், ஆனால் அதற்குப் பத்துரூபாய் வேண்டும் என்றார் காந்தி. அன்பர் இசைந்தார்.

காந்தி மெள்ள சிந்தித்து ஒவ்வொரு எழுத்தாகச் சேர்த்து மோ. க. காந்தி என்று எழுதிவிட்டார். ''முயன்று பார்க்கிறேன் என்று கூறிவிட்டுச் சரியாக எழுதிவிட்டீர்களே! என்றார் அந்த அன்பர். ''அப்படியா பிழையில்லாமல் எழுதியதற்காக மேலும் பத்துரூபாய் என்றார் காந்தி. அன்பரிடம் பணம் இல்லை அப்போது. காந்தி சொன்னார், பரவாயில்லை நாளைக்குக் கொண்டு வந்து தாருங்கள் உங்களிடம் எனக்கு நம்பிக்கையிருக்கிறது.

உள்ளக் கிளர்ச்சியடைந்த அந்த அன்பர் தம்முடைய விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி காந்தியிடம் தந்து வணங்கினார். காந்தியும் அதை ஏற்றுக் கொண்டார்.

அந்த சமயத்தில் அங்கே வந்த பண்டித ஜவாஹர்லால் ''என்ன செய்தி?'' என்று கேட்டபோது, பாபுஜி வியாபாரம் செய்கிறார் என்று தொடங்கிய பஹன் அந்த நிகழ்ச்சியை நேருவிடம் எடுத்துக் கூறினார்.

''பாபுஜி ஓர் பனியா (வணிகர்) என்பது உமக்குத் தெரியாதா? என்று தமிழன்பரைக் கேட்டார் ஜவாஹர்லால்.

ஆம் கொள்ளையடிப்பதிலும் அவர்களை மிஞ்சிவிட்டார் இது தனிச்சிறப்புத்தான் என்றார் தமிழன்பர். இதனால் பயனடையும் மக்களுடைய வாழ்க்கையை நினைத்துப் பாருங்கள் என்றார் காந்தி. அந்த அன்பர் மீண்டும் காந்தியை வணங்கி ''உங்களுடைய ஆசியே எனக்குப் போதும்'' என்றார். காந்தி அவருடைய முதுகில் தட்டிக்கொடுத்து ஆசி கூறினார்.

> தனிப்பட்டவரால் மட்டும் அனுஷ்டிக்கப்படும் அஹிம்சை சமுதாயத்துக்குப் பயன்படாது.
>
> — காந்தி

இந்தியா செய்ய வேண்டிய முடிவு!

இந்தியா ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். அது விரும்பினால் போரின் வழிச் சென்று இப்போது தானுள்ள நிலையினும் இழிவுறவாம்......... இந்தியா ஒருக்கால் போர் நடத்தி விடுதலை பெற முடிந்தாலும் அகன் அப்பொழுதைய நிலை பிரான்சையும் இங்கிலாந்தையும் விட மோசமாய் இருக்குமே தவிர உயர்ந்ததாயிராது. ஆனால் அமைதிவழி அதற்கு இருக்கவே இருக்கிறது. பொறுமை மட்டுமிருந்தால் அதற்கு விடுதலை வந்தே தீரும். நம் அவசர புத்திக்கும் அவ்வழி நீண்டதாய் காணினும் அதுவே மிகவும் குறுகிய விரைவில் கிடைக்கக் கூடிய வழி. அமைதி வழியில் நாட்டின் அகவளர்ச்சிக்கும் அமர்ந்த நிலைக்கும் இடமிருக்கும். நாம் இப்பொழுது அதை ஏற்க மறுப்பதற்கு காரணம் நம் தலை மீது அமர்ந்துள்ள ஆட்சியாளருக்கு நாம் அப்பொழுது பணிய வேண்டியிருக்குமோ வென்ற எண்ணம் தான். ஆனால் அவர்கள் நம்மீது அமர்ந்திருப்பது பெயரளவுக்குத்தான். நாம் உயிரையும் பொருளையும் இழக்க சம்மதியாததனால் அதற்கு உதவுகிறோம் என்பதை உணர்ந்ததும் நாம் செய்ய வேண்டியது இந்த எதிர்மறையான மௌன ஆதரவை நிறுத்தி விடுவதே! ஆயுதப் போரின் விளைவான ஆன்மீக இழப்புகளுடனும் கஷ்ட நஷ்டங்கள் ஒன்றுமே இல்லை. ஆயுதப் போரின் விளைவான துன்பங்கள் இரு சாராரையுமே பாதிக்கும். மாறாக அமைதி முறையில் வரும் துன்பங்களோ இருவருக்குமே நன்மை பயக்கும். அவை பிரசவ காலத்தில் தாய்க்கு வரும் இன்பகரமான நோவு போன்றவைதாம்.

அமைதி வழி சத்திய மார்க்கமாகும். உண்மை தவறாமை அமைதியை விட முக்கியமானது. பார்க்கப் போனால் பலாத்காரம் தோன்றுவதே பொய்யிலிருந்து தான். உண்மை தவறாது நடப்பவன் வெகு காலத்திற்கு பலாத்காரம் புரிந்து கொண்டிருக்க மாட்டான். அவன் தன் சோதனையினிடையே தனக்கு பலாத்காரம் தேவையில்லை என்பதை உணர்வதோடு தன்னிடம் சிறிது இம்சை இருப்பினும் தான் தேடும் சத்தியம் தனக்குக் கிட்டாது என்பதை உணர்வான்.

உலகறிய அஹிம்சை முறையில் இந்தியா தன் உரிமையைப் பெற்றுவிடுமானால் அதற்கு பிரமாண்டமான தரைப்படையோ, பெரிய கடற்படையோ, மேலும் சிறந்த விமானப்படையோ தேவைப்படாது என்பது எனக்குத் தெரியும்.

அது நடத்தும் சுதந்திரப் போரில் அதற்கு அஹிம்சை முறையிலேயே வெற்றி கிடைப்பதற்கு வேண்டிய அளவு சுயஉணர்வு பெற்று உயருமானால் இப்பொழுது உலகில் வழங்கும் மதிப்புக்களோ மாறிப் போய்விடும். போருக்காக எங்கும் சேமிக்கப்பட்டுள்ள பெரும்பாலான சாமக்கிரிகள் சல்லிக்காசு பெறாது போம். இத்தகைய இந்தியா வெறும் பகற் கனவாகவும் சிறு பிள்ளையின் மனக்கோட்டையாகவும் இருக்கலாம்.

ஆனால் இந்தியா அஹிம்சை முறையில் சுதந்திரம் பெறுவது என்பதன் பொருள் இது என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்காவும் இங்கிலாந்தும் செய்பவை எல்லாம் நமக்கு நல்லதேயென்று கண்களை மூடிக்கொண்டு எண்ணுதல் இப்போது வழக்கமாயிருக்கிறது. இக்காலத்தில் போர் என்பது பணவிவகாரமாகவும் புதிய அழிப்பு ஆயுதங்களைக் கண்டு பிடிக்கச் சக்தியுள்ளவர்களுக்கே வெற்றியளிப்பதாகவும் இருக்கிறது. அதில் தனி மனிதன் வீரத்திற்கோ சகிப்பிற்கோ இடமில்லை. பல ஆடவரையும் பெண்களையும் குழந்தைகளையும் அழிப்பதற்கு இப்பொழுது ஒரு சிறிய பித்தானை அமுக்கினால், மேலேயிருந்து ஒரு கணம் விஷத்தைப் பொழிந்தால் போதும். தற்காப்பிற்கு நாம் இம்முறையை பின்பற்ற விரும்புகிறோமோ? ஒருக்கால் விரும்பினாலும் அதற்கு வேண்டிய பணத்திற்கு நாம் எங்கே போவது? ராணுவச் செலவு ஏறிக் கொண்டே போகிறது என்று குறை கூறப்படுகிறது. அமெரிக்காவையோ இங்கிலாந்தையோ பின்பற்றுவதனால் அச்சுமையை பத்து மடங்கு பெருக்க வேண்டியிருக்குமே.

நாட்டை பலவந்தமாக அஹிம்சை வழியில் செலுத்த முடியாது. அது தன்இலட்சியத்தை சுய முயற்சியினாலேயே எய்த வேண்டும். எனவே நாம் கவனிக்க வேண்டிய பிரச்சனை உடனடியாக நம் நோக்கமென்னவென்பதே. முதலில் மேலை நாடுகளைப் பின்பற்றி நடந்து அதன் விளைவான துன்பங்களை அனுபவித்தானபின் வெகு காலத்திற்கப்பால் நம் வழியை மாற்றிக் கொள்ள விரும்புகிறோமோ? அல்லது புதிய வழியொன்றில் சென்று அல்லது நமக்கே உரிய பெரிதும் அமைதியான முறையில் நடந்து விடுதலை பெறவும் பெற்ற விடுதலையைப் பாதுகாக்கவும் நமக்கு விருப்பமா?

இங்கே கோழைத்தனத்திற்குச் சலுகை காட்டுதல் என்பதற்கே இடமில்லை. தற்காப்புக்கேனும் அழிப்பு வேலையில் தம்மைப் பற்றிக் கொண்டு அதில் வரும் துன்பங்களை அனுபவிக்கப் பழக வேண்டுதல், அல்லது நாட்டின் பாதுகாப்பில் வரும் சிரமங்களை ஏற்கச் சித்தமாகி அதை ஆக்கிரமிப்பிலிருந்து காக்க வேண்டும். இவ்விரண்டிற்குமே தீரம் இன்றியமையாதது. ஆனால் இரண்டாவதில் போல் முதலாவதில் ஒவ்வொரு மனிதனும் பெரிய வீரனாக இருந்தாக வேண்டுமென்பதில்லை. இரண்டாவதிலும் நம்மால் இம்சையை ஒருக்கால் முழுவதும் தவிர்க்க முடியாமற் போகலாம். ஆனால் அப்பொழுது அந்த இம்சை அஹிம்சைக்கு அடங்கியதாயிருந்து கொண்டு போகப்போக குறைந்துகொண்டே போகும்.

தற்சமயம் நம் தேசியக் கொள்கை கருத்திலும் சொல்லிலுமாவது அஹிம்சையாகவே இருப்பினும்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

கிராமியத் தொழிலாளர் நலன்

— சி. எஸ். சுப்பிரமணியம் — (வளர்ந்தோர் கல்வி அதிகாரி)

இலங்கையின் குடிசன மதிப்பின்படி ஏறத்தாழ 70% ஆன மக்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள். இவர்கள் தான் இந்த நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவர்கள். கிராமவாசி விவசாயம் செய்து உணவு விஷயத்தில் நாட்டைத் தன்னிறைவு பெறச் செய்வதோடு குடிசைக் கைத்தொழில் களிலும் ஈடுபட்டு தனது வருவாயை பெருக்கிக் கொள்ள முயற்சிக்கின்றான் இவ்வாறு விவசாயம் கைத்தொழில் ஆகிய முக்கிய பொருளாதார முயற்சிகளில் ஈடுபடும் தொழிலாளிக்கு பல விதத்தில் நாம் உதவக் கடமைப்பட்டுள்ளோம். இந்த தொழிலாளி தனது ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த நாம் உதவுதல் அவசியம்.

சுகாதாரமும் நல்ல தேக ஆரோக்கியமும்

கிராமிய தொழிலாளர் வீடுகளில் சுகாதார முறைப்படி வாழ இவர்களுக்குப் பயிற்ற வேண்டும். வீட்டையும் சுற்றுடலையும் நன்றாக வைத்திருக்கவும் தொற்று நோய் பீடிக்காத வண்ணம் இவாகள் வாழவும் பயிற்றல் அவசியமாகும். தொற்று நோய் தடுப்பூசி, அம்மைப்பால் கட்டல், B. C. G. ஊசி, சிறு பிள்ளை வாதம், தொண்டைக்கரப்பன், குக்கல் போன்ற நோய் தடுப்பு முறைகளையும் இவர்களுக்கு வழங்க வேண்டும்.

மூட நம்பிக்கையை அகற்றல்:-

கிராம வாசிகள் அறிவு குறைவானவர்கள்; அவர்களுடைய மூட நம்பிக்கைகளை அகற்றி சுகாதார முறைப்படி வாழ வழி செய்தல் மிகவும் அவசியம். இலங்கையின் கிராம வாசிகள் பொதுவாக புராதன பழக்கவழக்க முடையவர்கள். இவர்களுக்கு தடுப்பூசி மருந்துகள் போடுவதற்கு எதிர்ப்பான சில நம்பிக்கைகள் உண்டு. போதனையால் இவைகளை அகற்றி இவர்களை நல்வழிப் படுத்தி சுகாதார முறைப்படி நோயின்றி வாழவும் தொற்று நோய்களுக்கு இரையாகாமல் இருக்கவும் இவர்களுக்கு உதவி செய்தல் எமது கடமையாகும். இதனால் மலேரியா, வயிற்றோட்டம், சிறு அம்மை, சின்னமுத்து, கசம், மேக நோய், வாந்திபேதி போன்ற தடுக்கக் கூடிய நோய்கள் வராமல் தடுக்கலாம். சிறு பிள்ளைகளுக்கும் இவை வராமலும் சிறுபிள்ளைவாதம் தொண்டைக்கரப்பன குக்கல் அக்கி போன்றவை பீடிக்காமலும் நல்ல முறையில் வாழ உதவலாம். இதற்கு நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்கள் மிக அவசியம். இவற்றை நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். சமூக சேவை பணி புரியும் சுகாதார உத்தியோகத்தர் இச் சேவையை சீனாவில் திறம்பட புரிகிறார்கள். மக்களோடு இவர்கள் இணைந்து வாழ்ந்து அவர்களோடு ஒன்றாக இயங்கி இதனைச் சாதிக்கின்றனர்.

எழுத்தறிவு:-

கிராம வாசிகளில் பலர் எழுத்தறிவின்றி இருக்கின்றார்கள். எழுத்தறிவற்றதொழிலாளி திறமையற்ற ஒரு சமூகத்தின் பாரமாக கணிக்கப்படுவான். கையொப்பமிடவும் எழுதவும் வாசிக்கவும் தமது தொழிலோடு சம்பந்தப்பட்ட கணக்குகள் நிறைகள் அளவுகள் கணிக்கவும் தெரிவது மிகவும் அவசியம். நடுவில் தரகர்கள் இவர்களை ஏமாற்றி சுரண்டாமல் தவிர்ப்பதற்கு எழுத்தறிவும் கணக்குப் பார்க்கக்கூடிய கணித அறிவும் இவர்களுக்கு போதிப்பது அவசியமாகிறது.

தேவைகளை அறிதல்:-

தொழிலாளர் தங்களுக்குத் தாங்களே உதவுவதற்கு நாங்கள் உதவி செய்தலே சிறந்த முறையாகும். முதலில் நாம் அவர்களிடம் அவர்கள் இருந்து வசிக்கும் இடங்களுக்குச் செல்லவேண்டும். அவர்களுடைய கிராமங்களில் அவர்களுடைய சிறு வீடுகளுக்கு நாம் சென்று அவர்களுடன் அளவளாவி கலந்துரையாடி அவர்களின் உண்மைத் தேவைகளை நாம் அறிந்து செயல்பட வேண்டுமேயன்றி எமது திட்டங்களை அவர்கள் மீது புகுத்தலாகாது. முடியுமானால் தொழிலாளருடன் வசித்து அவர்களுடன் உறவாடி அவர்கள் தேவைகளை உணரவேண்டும். நாமும் அவர்களுள் ஒருவர் என்று அவர்கள் எங்கள் மீது நம்பிக்கை வைக்கும் அளவுக்கு நாம் அவர்களுடன் உறவாட வேண்டும் இப்படி செயலாற்றினால் அவர்களுக்கு என்ன தெரியும் என்ன தெரியாது என்பதையும் நாம் கண்டுபிடிக்கலாம் அவர்களுடைய தேவைகள் என்ன என்பதை அவர்களிடம் நாம் அறிதல் அவசியம் எமது திட்டங்களை அவர்கள் மீது திணித்தலாகாது. சில நாடுகளில் இவ்வகையான முறை கேடான வழிகளில் கிராமிய தொழிலாளர்களுக்கு அதிகாரிகள் தமது திட்டத்தை அவர்கள் மீது கொட்டுகிறார்கள். இதனால் எந்தவித நன்மையும் ஏற்படாது ஆபிரிக்காவில் சில நாடுகளில் தொழிலாளர் நலன் கருதி அரசாங்கம் நகர் புறத்திலிருந்து சில திட்டங்களை உருவாக்கி கிராமங்களில் செயல் படுத்துகிறார்கள். இதனால் எதுவித நன்மையும் கிட்டவில்லை உதாரணமாக எழுத்தறிவில்லாத மந்தை மேய்ந்து சீவிக்கும் கிராமங்களில் நடமாடும் நூல்நிலையங்களை வாகனங்களில் அனுப்புவதால் தொழிலாளர் எதுவித பயனும் பெறமாட்டார்கள். இவர்களுக்கு முதலில் எழுத்தறிவு கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஒரு தொழிலாளர் சமுகத்திற்கு என்ன தேவை என்பது அவர்களுக்குத்தான் தெரியும் அவர்களுடன் இருந்து அவர்கள் மூலம் நாம் அத் தேவைகளை அறிந்து முக்கியத்துவ அடிப்படையில் அவைகளை வகுக்க வேண்டும்.

கூட்டு முயற்சி:-

தொழிலாளர் தேவைகளை இனம் கண்டதும் அவர்களுடைய உதவி அடுத்தாற் போல் அவசியமாகிறது அவர்கள் ஒத்துழைப்பு தேவை. சில பிரச்சனைகளுக்கு கூட்டு முயற்சியும் தொழிலாளரிடமிருந்து வளமும் பெறவேண்டியிருக்கும். அங்குள்ள பஞ்சாயத் தலைவர்கள் அறிவாளிகள் இம்முயற்சியில் ஒத்துழைக்க வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)

பிரார்த்தனையின் தத்துவம்

- ஜீவன் -

"நான் தினமும் முன்னைவிட நல்லவனாக திறமையுள்ளவனாக, ஆகி வருகிறேன். என் இலட்சியங்கள் ஈடேறி வருகின்றன" என்று தினமும், திரும்பத் திரும்பக் கூறச் சொன்னார் பிரான்சு மனோதத்துவ நிபுணர் எமிலி கூ.

இதனை நம்மை நாமே மனோவசியம் செய்து கொள்ளுதல் என மனவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

மனோவசியத்தில் நம் ஆழ்மனத்திற்கு உத்தரவுகள் தரப்படுகின்றன. அப்போது மனம் நினைவு நிலையில் இல்லை. பிரார்த்தனையின் போது மனம் ஒரு முகப்பட்டு புறச் சூழ்நிலையை மறந்த வண்ணம் ஐக்கியமாகின்றது. அப்போது நமக்கு நாமே கூறிக்கொள்ளும் பிரார்த்தனைகள் நமது ஆழ்மனத்திற்குச் சென்று பதிகின்றன.

நமது ஆழ்மனம் ஓர் அதிசயமிக்க கருவி. நமது ஆழ்மனத்தை ஒரு கம்பூயூட்டருக்கு ஒப்பிடலாம்.

நமது ஆழ்மனம் இருவிதங்களில் செயல்படுகின்றது. ஒன்று எவ்வளவுக் கெவ்வளவு உணர்ச்சிபூர்வமாக நமது எண்ணங்களை—ஆசைகளை — வேண்டுகோள்களைச் சிந்திக்கின்றோமோ—அவ்வளவுக்கு அவ்வளவு ஆழமாக அவை ஆழ்மனத்தில் பதிகின்றன. ஏன் உணர்ச்சியுடன் நம் லட்சியங்களைப் பிராத்தனையின் போது கூறவேண்டும்.

நமது உணர்ச்சிக்குள்ள சக்தி மகத்தானது. யாரையாவது ஆழ்ந்த உணர்வுடன் நீங்கள் எண்ணும் போது அவர்கள் அந்த உணர்வை மறுபுறம் உணர்கிறார்கள். உணர்ச்சியுடன் ஆளப்படும் நமது பிரார்த்தனை ஆழ்மனம் என்ற மத்திய ஆய்வு கூடத்திற்குச் செல்கின்றது. பின் அந்த ஆழ்மனம் அதை அங்கே பரிசீலித்துப் பிரச்சனைக்கு வழிகாண ஏற்பாடு செய்கிறது.

ஆழ்மனத்தின் இரண்டாவது அற்புத இயல்பு பழக்கமாகும். நீங்கள் கூறும் எண்ணத்தின் உண்மை—பொய்மை பற்றி அதற்கு அக்கறை இல்லை. ஆனால் எந்த எண்ணமும் திரும்பத் திரும்பக் கூறப்படும்போது ஆழ்மனத்தின் அணையா இலட்சியமாக அது மாறிவிடுகின்றது.

திடீரெனத் தோன்றும் ஓர் எண்ணம் தீப்பொறி போன்று சட்டென்று மறந்து விடுகிறது. ஆனால் திரும்பச் சொல்லும் வேண்டுகோள் ஆழ்மனத்தில் வலுப்பெறுகிறது. அதுதானே இயக்கம் பெறுகிறது. நமது வேண்டுகோள் புற உருவத்தில்—நடைமுறை உலகில் நிகழும் அதிசயம் தோன்றுகிறது.

பழக்கம் என்பது என்ன? ஒரு காரியத்தைத் திரும்பத் திரும்பச் செய்வதே பழக்கமாகும். பழகியவுடன் அதை நிர்வகிப்பது—கையாள்வது எளிதாகி விடுகிறது.

எதுவும் முதலில் மன அளவில் திரும்பத் திரும்பக் கற்பனை செய்யப்படுகிறது. மன அளவில் நடிக்கப் பெறுகிறது. பின் நாம் நேரடியாகச் செய்யத் துவங்குவது எளிதாகின்றது.

பிரார்த்தனையின் ரகசியமே திரும்பத் திரும்ப பலன்தரும் வரை அதை மன அளவில் கற்பனை செய்வதில்—மன அளவில் வாழ்ந்து பார்ப்பதில் அடங்கியிருக்கிறது. எதை நம் ஆசைகளாக— இலட்சியங்களாக பிரார்த்தனையில் கொள்ள வேண்டும் என்பது உலக நியதிகளுக்கும், லட்சியத்தின் தன்மைகளுக்கும் கட்டுப்பட்டது.

பிரார்த்தித்து விட்டால் போதாது. நாம் கண்களை அகல விரியவைத்து சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருக்க வேண்டும். நமது லட்சியம் ஈடேற வாய்ப்புத்தரும் ஒவ்வொரு சம்பவத்திலும் துடியாயிருந்து நாம் செயல்பட வேண்டும்.

சொற்களுக்குப் பொருள் இருப்பது மட்டுமல்ல அதன் பொருளுக்கேற்ற வலிமையும் அதற்குள் இருக்கிறது என்கிறார் காந்தி மகான்.

ஆகவே நல்ல சொல்லாகத் தேர்ந்தெடுங்கள். நல்ல லட்சியமாகத் தேர்ந்தெடுங்கள். பிரார்த்தனையின் மூலம் ஆழ்மனத்திற்கு அனுப்புங்கள். நம் பிரச்சனைகளுக்கு வழிகிட்டும்.

> திறந்த வெளிதான் பிரார்த்தனைக்கு ஏற்ற கோயில். அதுவே எம்மதத்திற்கும் சம்மதம். அதற்கு நீலவானமே கூரை: பூமாதேவி தளம்.
>
> —காந்தி—

இந்தியா செய்ய......

(7ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இம்சை வழிச் சென்று கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. எங்கும் பரபரப்பு காணப்படுகின்றது. நாம் பலாத்காரத்தில் இறங்காதிருப்பது நம் பலவீனத்தினுல்தான். ஆனுல் தென்பு காரணமாக நாம் பலாத்காரத்தைத் தெரிந்தே ஒதுக்க வேண்டும். இதைச் செய்ய முடிவதற்கு நமக்கு கற்பனு சக்தியும் உலகின் போக்கை நுணுக்கமாய் ஆய்ந்தறியும் ஆற்றலும் வேண்டும். இன்றே மேலே நாடுகளின் பகட்டையும் படாடோபத்தையும் கண்டு மயங்கி அங்கே நாள் தோறும் நடக்கும் மெய் மறந்த களியாட்டத்தை அவைகளின் முன்னேற்றமென்று தவருக எண்ணிக் கொள்கின்றோம்.

அது நம்மை உண்மையில் அழிவுக்கு இட்டேகுவதை உணர மறுக்கின்றோம். முக்கியமாக மேனுட்டாரின் முறைகளில் நாம் அவர்களோடு போட்டியிடுதல் தற்கொலே செய்து கொள்ளுதலே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறன்றி பலாத்கார முறையே உயர்ந்தது போல் பார்வைக்கு தோன்றினும் உலகத்தை நடத்திச் செல்வது ஆன்ம தத்துவமே என்பதை நாம் உணர்ந்தால் அதன் அளவிட முடியாத ஆற்றலில் முழு நம்பிக்கையுடன் அதில் பயிற்சி பெற வேண்டும். 1922ல் நாட்டில் அஹிம்சை சூழ்நிலே மட்டும் கெடாது பார்த்துக் கொள்ளப்படிருந்தால் நம் நோக்கமுழுவதும் நிறைவேறியிருக்குமென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிருர்கள். அந்நிலேயிலும் நம் அஹிம்சை திருத்தமானதாய் இல்லாதிருந்தும் அதன் ஆற்றலே உணர முடிந்தது. மேலும் அப்பொழுது பெற்ற சுயராஜ்யத்தின் சாரப் பகுதிகளே நாம் பிறகு இழக்கவே இல்லே. சத்தியாக்கிரகம் பிறப்பதற்கு முன் நாட்டைப் பீடித்த பட்ச வாதம் போன்ற பயம் அதை விட்டுப் போய் விட்டது. ஆகையால் அஹிம்சையை அனுஷ்டிக்க வேண்டுமென்ருல் நாம் அதற்காகப் பொறுமையுடன் பயின்ருக வேண்டுமென்பது என் அபிப்பிராயம். நாம் தப்பி உலகின் மேம்பாட்டிற்கு உருப்படியாக உதவவும் வேண்டுமென்ருல் அஹிம்சை வழியையே உறுதியாக பெரிதும் பின்பற்றியாக வேண்டும்:

தேசிய அரசாங்கம் எந்தக் கொள்கையைப் பின்பற்றுமோ எனக்குத் தெரியாது. கண்ணுல் பார்க்க வேண்டுமென்ற ஆசை எவ்வளவோ இருப்பினும் நான் அதுவரை உயிர் வாழாது போகலாம். ஒருக்கால் வாழ்ந்தால் நான் நாட்டிற்கு கூடியவரை அஹிம்சையையே அனுஷ்டிக்குமாறு சொல்வேன். அதுதான் உலக அமைதிக்கும் உலகைப் புதுமுறையில் அமைந்து நடக்கச் செய்வதற்கும் இந்தியா செய்யும் பேருதவியாகவிருக்கும். இந்தியாவில் போரே தொழிலாயுள்ள இனங்கள் பல இருப்பதாலும் அவர்கள் எல்லோருக்கும். அரசாங்கத்தின் போக்கை நிர்ணயிக்கும் உரிமையிருக்குமாகையால் தேசியக் கொள்கை சில மாறுதல்களுடன் ராணுவ முறையைச் சார்ந்ததாகத்தானிருக்கும் அஹிம்சையை அரசியலிலும் வெற்றிகரமாகக் கையாள்வதற்கு இதுவரை நாம் செய்துள்ள முயற்சிகள் வீண்போக மாட்டா. உண்மையான அகிம்சையைப் பின்பற்றி நடக்கும் ஆற்றல் வாய்ந்த கட்சியொன்று நாட்டில் இருந்து வருமென்று நான் நம்பிக் கொண்டு தானிருப்பேன்.

அறவழி சிறுவர் கழகம்

இன்றைய சிறுவர்களே நாளேய எமது சமுதாயத்தில் நற்பிரஜைகளாவர். இச் சிறுவர்களே அவர்களின் இளவயதிலேயே நல்வழிப் படுத்தி பயிற்சி அளித்து, சமுதாயத்துக்கு நற்பணிகள் ஆற்றத் தக்கவர்களாக ஆக்குதல் இன்றைய காலத்தில் வாழ்கின்ற எம்மவர்களின் தலேயாய கடமைகளில் ஒன்ருகும்.

இதனே அடிப்படையாகக் கொண்டு அறவழிப் போராட்டக் குழு கிராமங்களில் அறவழி சிறுவர் கழகங்களே அமைத்து வருகின்றது.

இதுவரை சுமார் 25க்கு மேலான சிறுவர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிறுவர் கழகங்களின், நோக்கம், செயல்திட்டங்கள் பற்றி கிராமத்துக்குக் கிராமம் அறவழி சிறுவர் கழகத்தின் இயக்குனர் திரு. ஏ. பேரம்பலம், இயக்குனர் திரு. சீ. எஸ். தங்கராசா ஆகியோர் விஜயம் செய்து, சிறுவர்கள் மத்தியில் கருத்துரைகள் ஆற்றி வருகின்றனர்.

அமைக்கப்பட்டுள்ள அறவழி சிறுவர் கழக உறுப்பினர்களேச் சிறுவயது முதல் தொட்டே சமுதாயப் பணியில் ஆர்வப்படுத்தி, ஈடுபடுத்தும் நோக்குடன் வேலேத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பிரான்சில் வாழத்துடிக்கும்......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 72 குழந்தைகள் விடயத்தில் பங்களா தேஷ் அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வரும் ''மௌனம்'' காரணமாக அவர்கள் கடந்த 9 மாதங்களாக அகதிகள் முகாமில் இருந்து வருந்திக் கொண்டிருக்கின்றனர்.

இக்குழந்தைகளே பாதுகாப்பாகவும், கௌரவத்துடனும் பிரான்சுக்கு அனுப்பச்செய்வதற்கு சர்வதேச மட்டத்தில் ஆதரவைத்திரட்டும் பணியில் சர்வதேச தோழமை இணக்க இயக்கம் (IFOR) சர்வதேச மன்னிப்புச்சபை (AI) போன்ற சர்வதேச அமைப்புக்கள் தற்போது பணியாற்றிவருகின்றன.

இக்குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு உதவிக்கரமும்— ஆதரவும் கிடைக்கச்செய்யும்பொருட்டு சர்வதேச மட்டத்தில் பல அமைப்புக்கள் தமது ஆதரவை நல்கிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விடயத்தில், அறவழிப்போராட்டக் குழுவும் அறவழி சிறுவர் வட்டமும் தமது முழுமையான ஆதரவையும், அன்பையும் இக்குழந்தைகளுக்கு வழங்கியுள்ளது.

இக்குழந்தைகள் மிகவிரைவில் பிரான்சு சென்று அமைதியான, பாதுகாப்பான வாழ்வை ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்சாகத்திற்கு ஒரு சொல்

பிறர் உற்சாகம் பெற, நாம் உற்சாகம் அடைய ஒரு சொல், சொல்லக் கூடாதா? ஒரு நல்ல சொல். உண்மையான பாராட்டு. நாம் கொடுக்கும் ஒரு நம்பிக்கை. ஒரு தைரியம்—ஒரு புது மலர்ச்சியையும், உற்சாகத்தையும் பிறரிடம் தோற்றுவித்ததை நீங்கள் கண்டதில்லையா?

நாம் பிறரைச் சந்திக்கும்போது ஏன் ஓர் உற்சாகம் தரும் சொல்லைச் சொல்லக்கூடாது? அவர் செய்யும் தொழிலை, சேவையைப் பாராட்டக்கூடாது? ஊக்குவிக்கக்கூடாது? அவர் நோய்வாய்ப்பட்டிருந்தால் ஒரு நம்பிக்கையூட்டக்கூடாது? உதவக்கூடாது? அப்படிச்சொல்லும்போது நாமும் நம்மைச்சூழ்ந்துள்ள உலகமுமே மாறுவதை—மலர்வதை—புதிய சக்தி பெறுவதை உணர்வீர்கள்.

தத்துவஞானி

ஜே. கிருஷ்ணமூர்த்தி அருளியவை

* எங்களுடைய இதயம் வெறுமையாக இருக்கும்போதே நாம் விடயங்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறோம்.

* நீங்கள் உங்களைக் கண்டுபிடிப்பதற்கு உறவுகளே கண்ணாடி.

* உண்மை, பாதைகளற்றதொரு பிரதேசமாகும், எப்பேர்ப்பட்ட சமயங்களினாலும் எதுவித கட்சிகளினாலும் எவ்வகையான வழிகளாலும் இதனை அடையமுடியாது.

* வாழ்வதன் உள்ளார்த்தமான அர்த்தத்தை உணர்ந்துகொண்டால், எதையோ ஒன்றைத் தொடர்ச்சியாகத் தேடி அலைவதைத் தவிர்க்கலாமல்லவா?

* ஒரு மனிதன் ஒரு கோட்பாட்டைத் வைத்துக் கொண்டுவிசாரத்தைத் தொடங்கக்கூடாது. சுதந்திர மனத்தோடேயே ஆரம்பிக்கவேண்டும்,

* தனிப்பட்ட ஒருவரது பிரச்சினையே உலகப் பிரச்சினை.

* நன்னோக்கமுள்ள மனிதர் முறை மரபுகளை வைத்திருக்கக்கூடாது.

என் அன்பளிப்பு அறவழி

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் நண்பர்/உறவினருக்கு உங்களின் அன்பளிப்பாக ''அறவழி'' மாதாந்தம் கிடைக்கச்செய்ய, ''என் அன்பளிப்பு அறவழி'' திட்டத்தில் இன்றே இணைந்துகொள்ளுங்கள்.

இதன்மூலம். மாதாந்தம் ''அறவழி'' பத்திரிகை உங்களின் அன்பளிப்பாக உங்கள் நண்பர்/உறவினருக்குச்சென்றடையும். நீங்கள் செலுத்தும் தொகையோ மிக மிகச்சிறிதானது. ஆனல், மாதாந்தம். உங்கள் அன்புக்குரியவர்களுக்கு—உங்கள் பெயரால் கிடைப்பதோஅரிய பெரிய கருத்துக்கள்கொண்ட வளர்ந்து வரும் தமிழ்மாதாந்தப் பத்திரிகை அறவழி.

சமுதாயத்தில் ஆக்கப்பணிபற்றிய சிந்தனையைத் தூண்டும் பத்திரிகை ''அறவழி''உங்களின் மாதாந்த அன்பளிப்பு—உங்கள் நண்பர்/உறவினரின் நல்வழிப்பட்ட சிந்தனைக்கு உதவ நீங்சள் காரணமாகின்றீர்கள்

"என் அன்பளிப்பு அறவழி"

திட்டத்தில் இன்றே, இப்பொழுதே இணைந்து கொள்ளுங்கள்.

சந்தா விபரம்—ஒரு வருடம் தபாலில்

உள்நாடு — ரூபா 30-00
இந்தியா —ரூபா 108-00
ஐரோப்பா —ரூபா 130-00
அமெரிக்கா, கனடா —ரூபா 150-00

''என் அன்பளிப்பு அற வழி''

''என் அன்பளிப்பு அறவழி'' திட்டத்தின் கீழ் நான் இணைந்துகொள்ள விரும்புகின்றேன் என் சார்பாக பின் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியாளருக்கு——வருடம் அறவழி அனுப்பி வைக்கவும். சந்தாத்தொகையாக ரூபா——— இத்துடன் அனுப்பியுள்ளேன்.

(1) பெயர்.......................................

முகவரி ....

நாடு

(2) பெயர்.......................................

முகவரி ....

நாடு

என் பெயர் ....

முகவரி ....

தமிழர் கொலை செய்யப்படுவதை நிறுத்துங்கள்!

ஜனாதிபதியிடம் அறவழி ஸ்தாபகர் ‘சச்சி’ நேரில் கோரிக்கை!!

யாழ்ப்பாண தமிழ் பிரமுகர் க. சச்சிதானந்தன் அண்மையில் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவைச் சந்தித்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவர் இவர். பிறகு ஐ, நா. அமைப்பில் பணிபுரிந்திருக்கிறார். 1986 ஜனவரியிலிருந்து சென்னையில் வசித்து வருகிறார்-

உலகெங்கும் உள்ள சமாதானப் பிரியர்களுடனும், போர் எதிர்ப்பாளர்களுடனும் தொடர்புடையவர் சச்சிதானந்தன். இவர்களுக்கான அமைப்பிலும் இருக்கிறார் இவர். இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் போர் நடக்கும் இடங்களில் சமாதானத் தூதுவர்களாகச் செல்வது உண்டு. சைப்பிரஸ்—துருக்கி சண்டையின்போது நாராயண தேசாய் என்ற இந்திய சமாதானப்பிரியர் சைப்பிரஸ் சென்றதுகூட உண்டு.

‘‘இந்த ஜனவரியில் எம், ஆர். ஏ. ஏற்பாடு செய்த மாநாடு ஒன்று நடந்தது. ‘‘சார்க்‘‘ அமைப்பில் பங்குபெறும் நாட்டு மக்களிடையே பரஸ்பர ஒத்துழைப்புக்கு உதவும் நோக்கத்துடன் நடந்த மாநாடு இது. இலங்கைத் தூதர், இலங்கை ஆளும் கட்சிப் பிரமுகர்கள் இதில் பங்குபெற்றார்கள். நானும் சென்றேன்’’ என்றார் சச்சிதானந்தன். அவர் தொடர்ந்து கூறியது:

‘‘இலங்கை ஆளும் கட்சிப் பெண்மணி சீதா செனிவர்த்தனா இந்த மாநாட்டில் பேசும்போது. இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு மன்னிப்பு கேட்டார். நாற்பது ஆண்டுகளாக தமிழர்கள் கொடுமைக்கு ஆளாவதாக ஒப்புக்கொண்டார்' சிங்களவர்கள் தமிழர்களுடன் சமாதானமாக வாழ விரும்புவதாக அவர் கூறினார்- 1972-ல் இயற்றப்பட்ட அரசியல் சாசனம் தமிழர் பங்குபெறாமல் ஏற்பட்டது என்பதை ஏற்ற அவர், ஜெயவர்த்தனாவை நாம் சந்திக்கவேண்டும் என்று கூறினார்.

மாநாடு முடிந்து திரும்பிய பிறகு, ஜெயவர்த்தனாவை சீதா சந்தித்தார். மாநாடு பற்றிக் கூறினார். அதன் விளைவாக, ஜெயவர்த்தனா எம்மை அழைத்தார். பிப்ரவரி மாதம் 11-ம் தேதி மாலை 5-30 மணிக்கு நேரம் கொடுத்து வருமாறு அழைத்தார் ஜனாதிபதி!

நானும் மேகாலயா பிரதிநிதி நிக்கல்ஸ்ராய் என்பவரும் போவதற்கு ஏற்பாடு ஆயிற்று. பிப்ரவரி 8-ம் தேதி புறப்பட்டுச் சென்றோம். ஜனாதிபதியைச் சந்திக்குமுன் தமிழர் தலைவர்களையும் சிங்களவர் தலைவர்களையும் சந்தித்துப் பேசினோம்.

நாங்கள் ஜெயவர்த்தனாவைச் சந்திக்கச் சென்றபோது சீதா செனிவர்த்தனாவும் எம். ஆர். ஏ. இயக்கப்பெண்மணி ரோகினி டிமெல்லும் எங்களுடன் வந்தனர்-

முதலில் அன்புடன் வரவேற்பு கொடுத்தார் ஜனாதிபதி. பிறகு திடீரென்று கோபமாக ‘‘ என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்’’ என்று கேட்டார். மேகாலயா பிரதிநிதி நிக்கல்ஸ்ராய் அமைதியாக பதில் கூறினார், இந்தியாவில் மக்கள் உரிமைகளுக்கு அரசாங்கம் முழு மதிப்பு தருவதையும் மேகாலயா உருவானதையும் எடுத்துச்சொன்னார். பிறகு நான் பேசினேன். 1972-ல் ஏற்பட்ட அரசியல் அமைப்பு சிங்களவரையும் தமிழரையும் பிரித்தது. தனி ஈழம் கேட்க வைத்தது. அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் வையுங்கள். தமிழர் பிரதிகளுடன் சமமாக உட்கார்ந்து தமிழர்கள் சம்மதத்துடன் புது அரசியல் அமைப்பு உருவாக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினேன்.

இது ஒரு உண்மையான கருத்து, நாம் பரிசீலிக்கத்தக்கது நான் ஏற்கிறேன் என்றார் ஜெயவர்த்தனா. எல்லோரும் மகிழ்ந்து போனோம்.

தமிழர் வாழும் பகுதிகள் சிங்களமயமாக்கும் திட்டத்தை தவறு என்று சுட்டிக்காட்டினேன். சிங்களவர்க்ளின் தாயகத்தைத் தமிழரும் தமிழரின் தாயகத்தை சிங்களவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றேன், ஏற்கெனவே நான் இதற்கு ஒப்புக்கொண்டுள்ளேனே என்றார். ஜெயவர்த்தனா.

உடனே சீதா செனிவர்த்தனா, தமிழர் போராட்டம் சிங்களவர்களைப் பாதித்திருக்கிறது. சிங்களவர் என்றால் கொடியவர்கள் என்று உலகம் இப்போது நினைக்கிறது. ஆகவே நிலைமை மாறவேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

பேச்சு முடிந்தது நீங்கள் சம்மதித்ததற்கு மகிழ்ச்சி. நீங்கள் ஏற்றுக்கொண்ட இரு விஷயங்கள் பற்றியும் தமிழர் இயக்கங்களிடம் சொல்கிறேன் என்றேன் எழுந்தவாறு நான்.

‘உட்காருங்கள்’ என்றார் திடீரென்று ஜெயவர்த்தனா அரசியல் நிர்ணய சபைத்தேர்தல் என்றால் மற்ற அரசியல் கட்சிகளையும் கேட்கவேண்டும். இலங்கை அரசியல் சட்டம் ஒற்றை ஆட்சி (யூனிடரி) அரசியல் சட்டம்தான். இதை மாற்ற எங்கள் கட்சி எம்.பிக்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

அதேபோல வடக்கு கிழக்கு இணைப்பை –தமிழர்பகுதி இணைப்பை —கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எங்கள் எட்டு எம். பிக்கள் ஏற்கவே மாட்டார்கள் என்றார் உரத்த குரலில். ஜெயவர்த்தனா அமைதியாக இருந்தவர் மாறிப்போனார்.

நான், இருசாராரும் வன்முறையை நிறுத்தவேண்டும். அப்போதுதானே அமைதியாக இருக்கலாம் தமிழர்கள் கொலை செய்யப்படுவதை நிறுத்துங்கள் என்றேன்.

‘நான் தமிழர்களைக் கொலை செய்யவில்லை . பிரபாகரன்தான் சிங்களவர்களைக் கொலை செய்கிறார்- அம்பாரையில் அவர்தான் கொலை செய்தார்’ என்றார் ஜெயவர்த்தனா. அம்பாரை சம்பவங்களை விளக்கினார்.

பிறகு கடுமையான குரலில் நான் ஒரு தனிமனிதன் இல்லை நானேதான் அரசாங்கம்! வன்முறை இல்லாத அரசுகள் உலகில் எங்காவது உண்டா? (I am not a person. I am the state, can you show me a state that is not violent.)

ராணுவம் அங்கே அப்படித்தான் செயல்படும். ராணுவ நடவடிக்கையை நிறுத்த உத்தரவிடமாட்டேன்- கடைசித் தமிழ் தீவிரவாதியை ஒழிக்கும் மட்டும் இதற்குச் சம்மதியேன் என்று கூறினார்.

சற்றுமுன் அவர் நிதானமாகப் பேசியதெல்லாம் என்னவாயிற்று-

சார்க் மகாநாட்டில் காந்தி—நேரு என்றெல்லாம் அகிம்சா மூர்த்திபோல் பேசிய ஜெயவர்த்தனாவின் இரட்டைவேடமும்—அசல் தோற்றமும் கண்டு திகைத்தேன்- வேதனையோடு நான் வெளியே வந்தேன்- சிங்கள பெண்மணிகள்மட்டும் பின்தங்கி ஜெயவர்த்தனாவுடன் பேசிக்கொண்டிருந்தார்கள்-

—நடந்த நிகழ்ச்சியை வர்ணித்தார் சச்சிதானந்தன்-

நன்றி: ஜூனியர் விகடன் 11—3—87.

வழிகாட்டி

லட்சியங்கள் விண் மீன்களைப்போல கைக்கு எட்டமுடியாதவை! கடலென்னும் பாலைவனத்தில் செல்லும் மாலுமிகளுக்கு நட்சத்திரங்கள் வழிகாட்டியாக இருப்பதைப்போல் லட்சியங்களை நோக்கிச் செல்லுங்கள். லட்சியத்தை அடைவீர்கள்.

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987 சித்திரை 22ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.